# வனத்துறை ஊழியர்களுக்கு ஜி.பி.எஸ்.. பயிற்சி

**ஊட்டி, அக். 28:** ஊட்டி கேர்ன்ஹில் வனத்துறை பல்நோக்கு மையத்தில் வனத்துறையில் ஜி.பி.எஸ். பயன்படுத்துவது குறித்து வனத்துறை ஊழியர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி முகாம் நடந்தது. வனத்துறை மற்றும் பெரல் ஆராய்ச்சி அறக்கட்டளை ஆகியவை சார்பில் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.

மாவட்ட வன அலுவலர் பத்ரசாமி நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். பயிற்சியில் வனப்பரப்புகள் குறிக்கும், வன எல்லைகள் போன்றவைகளை ஜி.பி.எஸ்., கருவி மூலம் கண்டறிவது குறித்து செயல்முறை விளக்கம் கொடுக்கப்பட்டது. இதில் வனவர், வாட்சர்கள், வேட்டை தடுப்பு காவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



ஊட்டி அருகேயுள்ள கேரன்ஹில் பகுதியில் வன ஊழியர்களுக்கு ஜி.பி.எஸ் கருவியை கையாளும் முறைகுறித்து பயிற்சி கொடுக்கப்பட்டது.